மோட்டார் வாகனங்கள் விபத்து இழப்பீட்டுக் கோருரிமைத் தீர்ப்பாயம், சென்னை

(I சிறப்பு நீதிமன்றம், சிறு வழக்குகள் நீதிமன்றம், சென்னை)

முன்னிலை : திருமதி. கே. சுஜாதா, பி.ஏ., பி.எல்.,

I சிறப்பு நீதிபதி, சிறுவழக்குகள் நீதிமன்றம், சென்னை

2025 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 7ஆம் நாள் திங்கள்கிழமை

மோ.வா.வி.இ.கோ.தீ. மனு எண். 4705/2022

(CNR No. TNCH09-010654-2022)

1. Sagundhala
W/o. Alamarathan
No.7, MGR 10th Street,
Panaiyurkuppam, Sholinganallur,
Kancheepuram, Chennai – 600 119.

2. Kumar
S/o. Dhurai
No.6/20, First Street,
Ondikuppam, Thiruvottiyur,
Chennai – 600 019.

3. Ravi
S/.o. Durai
NO.F30, Housing Board,
Thiruchinnaguppam, Thiruvottiyur,
Chennai – 600 019.

4. Sivakumar
S/o. Durai
No.6/20, First Street,
Ondikuppam, Thiruvottiyur,
Chennai – 600 019.

5. Divakar
S/o. Durai
Kudisai Pakathi,
Thiruchinnaguppam, Thiruvottiyur,
Chennai – 600 019.

SUJATHA Digitally signed by SUJATHA Date: 2025.07.07 17:34:02 +0530

6. Vasumathi
   W/o. Suriyamoorthy
   NO.7, MGR Nagar, 12 Street,
   Panaiyurkuppam, Sholinganallur,
   Kancheepuram, Chennai – 600 119.

7. Indumathi
   W/o. Deivamani
   NO.5, MGR Nagar, 12 Street,
   Panaiyurkuppam, Sholinganallur,
   Kancheepuram, Chennai – 600 119.

8. Suganyadevi
   W/o. Anbu
   NO.138, Gowriamman Koil 7th Cross Street,
   Injambakkm, Kuppam
   Kancheepuram, Chenani – 600 115. .... மனுதாரர்கள்

//எதிராக//

1. Rahamath Ali,
   NO.27/6, Nethaji Nagar 3rd Street,
   Tondiarpet, Chennai – 600 081.

2. ICICI Lombard General Insurance Ltd.,
   NO.84 / 85, Arihant Plaza Street,
   1st Floor, Walltax Road,
   Chennai – 600 001. ...... எதிர்மனுதாரர்கள்

இம்மனு 03.07.2025 ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞாகள் திரு. M. சிவராமகிருஷ்ணன், K. மலைக்கண்ணு மற்றும் R. சந்தியா அவர்களும், 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. Michael Marie Antony அவர்களும் ஆஜராகி, 1ஆம் எதிர்மனுதாரர் எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றாத் தரப்பினராகக் கருதப்பட்டும், இருதரப்பு வாதங்கள் கேட்டும், சாட்சியம் மற்றும்

SUJATHA Digitally signed by SUJATHA Date: 2025.07.07 17:34:07 +0530

சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரை பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

உத்தரவு

1. 1988 வருட மோட்டார் வாகனச் சட்டப் பிரிவு 166 மற்றும் மோட்டார் வாகன விதி 3ன் கீழ் இம்மனுவானது மோட்டார் வாகன விபத்தில் இறந்து போன Kali என்பவரின் இறப்பிற்கு ரூ.20,00,000/- இழப்பீடு கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டது.

2. மனுவின் சுருக்கம்

இந்த மனுவில் காலமான Kali கடந்த 03.05.2022 ஆம் தேதி சுமார் 05.30 மணியளவில் TN 03 K 5918 என்ற ஆட்டோவில் சென்று கொண்டிருந்தபோது, காலமானவர் பயணம் சென்ற ஆட்டோவின் ஓட்டுநர் ஆட்டோவை ஏண்ணூர் எக்ஸ்பிரஸ் ரோட்டில் தெற்கிலிருந்து வடக்ககாக அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து அதே சாலையில் ஓண்டிக்குப்பம் 1வது தெரு சந்திப்பில் மேற்காக அதே வேகத்தில் திருப்பிய போது ஆட்டோவில் பயணம் செய்த காலமான காளி கீழே விழுந்து பின்தலையில் காயம் ஏற்பட்டது இறந்தார். இந்த விபத்து ஆட்டோ ஓட்டுநரின் கவனக்குறைவினால் தான் ஏற்பட்டது. 1ம் எதிர்மனுதாரர் TN 03 K 5918 என்ற ஆட்டோவின் உரிமையாளர் மற்றும் 2ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டாளர் ஆவர். விபத்தில் காளி காலமாகி விட்டதினால் 1ம் மற்றும் 2ஆம் எதிர்மனுதாரர்கள் இழப்பீடாக ரூ.20,00,000/- வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

SUJATHA Digitally signed by SUJATHA Date: 2025.07.07 17:34:11 +0530

<u>3. 2ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்படும் எதிருரையின் சுருக்கம் :-</u>

மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் தவறானது, அற்பமானவை. இந்த மனுவில் எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்றவற்றை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும். மனுதாரர்களின் வயது, தொழில், முகவரி மற்றும் விபத்து நடந்த விதம் போன்றவற்றை இந்த எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளவில்லை. மனுதாரர்கள் சொல்வது போல் ஒரு விபத்து நடைபெறவில்லை என்றும், மேலும் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும் அந்த வாகனத்திற்கு ஆவணங்கள் முறையாக பராமரிக்கப்படவில்லை என்றும், அவர் காப்பீட்டு விதிகளை மீறி செயல்பட்டு இருப்பதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவரல்ல என்று கோரியுள்ளார்.

<u>4.இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனைகள் யாதெனில்,</u>

1. இந்த விபத்தானது TN 03 K 5918 என்ற பதிவெண் கொண்ட ஆட்டோ ஓட்டுனரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டதா? இல்லையா?
2. இந்த மனுவில் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவரா?
3. மனுதாரர்களுக்கு இழப்பீட்டுத் தொகை கிடைக்கத்தக்கதா? அவ்வாறெனில் எவ்வளவு கிடைக்கக்கூடியது?

5. இம்மனுவில் மனுதாரர்கள் தரப்பில் ம.சா.1 மற்றும் ம.சா.2 விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா1 விசாரிக்கப்பட்டு எ.ம.சாஆ1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

SUJATHA Digitally signed by SUJATHA Date: 2025.07.07 17:34:15 +0530

6. பிரச்சனை – 1 க்கான தீர்வு :-

i. மனுதாரர்களின் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் இந்த இந்த மனுவில் காலமான Kali கடந்த 03.05.2022 ஆம் தேதி சமார் 05.30 மணியளவில் TN 03 K 5918 என்ற ஆட்டோவில் சென்று கொண்டிருந்தபோது, காலமானவர் பயணம் சென்ற ஆட்டோவின் ஓட்டுநர் ஆட்டோவை ஏண்ணூர் எக்ஸ்பிரஸ் ரோட்டில் தெற்கிலிருந்து வடக்ககாக அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து அதே சாலையில் ஓண்டிக்குப்பம் 1வது தெரு சந்திப்பில் மேற்காக அதே வேகத்தில் திருப்பிய போது ஆட்டோவில் பயணம் செய்த காலமான காளி கீழே விழுந்து பின்தலையில் காயம் ஏற்பட்டது இறந்துவிட்டார் என்றும், இந்த விபத்து ஆட்டோ ஓட்டுநரின் கவனக்குறைவினால் தான் ஏற்பட்டது என்றும், காளி என்பவர் காலமானதற்கு உரிய இழப்பீடு வழங்க எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிட வேண்டுமென குறிப்பிட்டு வாதிட்டார்.

ii. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் மனுதாரர்கள் சொல்வது போல் ஒரு விபத்து நடைபெறவில்லை என்றும், 1ம் எதிர்மனுதாரரின் கார் ஓட்டுநரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் தான் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்றும், 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும் அந்த வாகனத்திற்கு ஆவணங்கள் முறையாக பராமரிக்கப்படவில்லை என்றும், அவர் காப்பீட்டு விதிகளை மீறி செயல்பட்டு இருப்பதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவரல்ல என்று குறிப்பிட்டு வாதிட்டார்.

iii. இருதரப்பிலும் முன்னிலைப்படுத்தப்பட்ட வாதுரைகள் மற்றும் வழக்கில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிய சான்றாவணங்கள் மிக கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. 5ஆம் மனுதாரர் ம.சா.1 ஆகவும், விபத்தில் கண்ணுற்ற சாட்சி ம.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு

SUJATHA Digitally signed by SUJATHA Date: 2025.07.07 17:34:19 +0530

அவர்கள் மனு சங்கதிகளை ஒத்து சாட்சியம் அளித்துள்ளனர் என்பது தெரிய வருகிறது. மேலும் அதனை உறுதிபடுத்தும் வகையில் விபத்து நடைபெற்றது குறித்து பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.2 ஆக இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.மேலும் ம.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கையை பரிசீலனை செய்ததில் **"இன்று 03.05.2022 ம் தேதி காலை சுமார் 05.30 மணி அளவில் எனது அக்கா காளி பெண் வயது 59 D/o. துரை என்பவர் வேளாங்கன்னி கோவிலுக்கு சென்று விட்டு வீட்டுக்கு எழும்பூரில் இருந்து ஆட்டோ TN 03 K 5918 என்ற வண்டியின் வருவதாக தொலைபேசியில் கூறியதால் நான் ஓண்டிக்குப்பம் 1வது தெரு சந்திப்பில் நின்றுக் கொண்டிருந்தேன். அப்பொழுது மேற்படி ஆட்டோ வேகமாகவும், கவனக்குறைவாகவும் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி இடதுபுறம் மேற்காக ஆட்டோ மேற்படி சம்பவயிடத்தில் திரும்பிய போது ஆட்டோவில் பயணம் செய்த என் அக்கா காளி கீழே விழுந்து விட்டார். விழுந்ததில் அவருக்கு பின் பக்க தலையில் இரத்தகாயம் ஏற்பட்டு மேற்படி அதே ஆட்டோவில் எனது அக்காவை ஏற்றிக் கொண்டு அருகில் சுகம் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்தேன்."** என்று குறிப்பிடப்பட்டு, வடசென்னை, Washermenpet போக்குவரத்து புலனாய்வு பிரிவு காவல் நிலைய குற்ற எண். 67/2022ல் இ.த.ச பிரிவுகள் 279, 337ன் கீழ் 03.05.2022 அன்று 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. அதேபோல், ம.சா.ஆ3 இறுதி அறிக்கை நகலில் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்பதற்காக இ.த.ச பிரிவு 279, 304 (A) ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. ஆனால், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் சொல்வது போல் ஒரு விபத்து நடைபெறவில்லை என்று மறுப்பு தெரிவித்து இருந்த போதிலும் அதனை நிரூபிக்கும் வகையில் வாய் மொழி சாட்சியமோ, ஆவண சாட்சியமோ முன்னிலைப்படுத்தவில்லை. எனவே, மனுதாரர்கள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சங்கதிகளான 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தை சம்பவ நாள், நேரம், இடத்தில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்த அதன் ஓட்டுநர்

SUJATHA Digitally signed by SUJATHA Date: 2025.07.07 17:34:22 +0530

தான் விபத்திற்கு காரணம் என்பதாக இத்தீர்ப்பாயம் தீர்மானித்து வினா எண்1 ற்கு விடை காண்கிறது.

7. **பிரச்சனை எண் 2க்கான தீர்வு**

விபத்தானது 03.05.2022 அன்று 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான **TN 03 K 5918** என்ற ஆட்டோ ஓட்டுநரால் ஏற்பட்டது என்பது மேலே விவாதித்த வகையில் திட்டவட்டமாக தீர்மானித்துள்ள நிலையில், மேற்படி வாகனத்திற்கான காப்பீட்டு சான்றிதழை பரிசீலனை செய்ததில் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான **TN 03 K 5918** என்ற வாகனமானது 2ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதும், அதன் காலவரையறையானது 27.09.2021 முதல் 26.09.2022 நள்ளிரவு வரை உள்ளது என்பதை அறிய முடிகிறது. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் 1ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிய ஓட்டுனருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுனர் உரிமம் இல்லை என்றும், மேற்கண்ட வாகனத்திற்கு ஆவணங்கள் முறையாக பராமரிக்கப்படவில்லை என்றும் 1ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு விதிகளை மீறி செயல்பட்டு உள்ளார் என்றும் குறிப்பிட்டு கூறியிருந்த போதிலும் அதனை நிரூபிக்கும் வகையில் வாய்மொழி சாட்சியமோ, ஆவண சாட்சியமோ முன்னிலைபடுத்தவில்லை. எனவே, மேற்படி விபத்தில் காலமான காளி இறந்து போனதற்கு 1ஆம் எதிர்மனுதாரர் விபத்து வாகனத்தின் உரிமையாளர் என்ற வகையிலும், 2ஆம் எதிர்மனுதாரர் அதன் காப்பீட்டாளர் என்ற வகையிலும் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்கள் ஆவர். எனவே 2ஆம் எதிர்மனுதாரர் 1ஆம் எதிர்மனுதாரரது வாகனத்தின் காப்பீட்டாளர் என்ற வகையில், மேற்படி சாலை விபத்தில் மனுதாரர்களுக்கு ஏற்பட்ட இழப்பீட்டினை வழங்க பொறுப்பானவர் என்பதாக இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

SUJATHA Digitally signed by SUJATHA Date: 2025.07.07 17:34:26 +0530

8. பிரச்சனை எண் 3 க்கான தீர்வு:-

(அ) பிரச்சனை 1ற்கு **TN 03 K 5918** என்ற வாகனத்தின் ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதை காரணமாக இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்றும், பிரச்சனை எண் 2ற்கு **TN 03 K 5918** என்ற வாகனத்தின் காப்பீட்டு நிறுவனமான 2ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டுத் தொகையினை மனுதாரர்களுக்கு செலுத்தவேண்டுமென தீர்வு காணப்பட்டுள்ளதாலும், விபத்தின் காரணமாக Kali காலமாகிவிட்டார் என்பது ம.சா.ஆ3 குற்ற இறுதி அறிக்கை நகல் மற்றும் ம.சா.ஆ4 பிரேத பரிசோதனை அறிக்கை நகல் மூலம் அறிய முடிகிறது.

ம.சா.ஆ.5 வாரிசு சான்றிதழ் படி 1 முதல் 8 வரையுள்ள மனுதாரர்கள் காலமானவரின் வாரிசுதாரர்கள் என்றும் அறிய முடிகிறது. ஆனால் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்கண்ட நபர்கள் வாரிசுதாரர்களாக இருந்தாலும் காலமான நபரை சார்ந்து வாழாதவர்கள் என்பதால் அவர்கள் இழப்பீடு பெற தகுதியற்றவர்கள் என்று வாதிடப்பட்டது. ஆனால், ம.சா.1 தன் சாட்சியத்தில் விபத்தில் காலமான காளி என்பவருக்கு திருமணம் ஆகவில்லை என்றும் அவருடைய இறப்பிற்கு முன்பாகவே அவருடைய பெற்றோர் இறந்து விட்டனர் என்றும் மனுதாரர்களாகிய 8 பேர்களும் காலமான நபரின் சகோதர சகோதரிகள் என்று சாட்சியம் அளித்துள்ளார். அதனை உறுதி செய்யும் வகையில் ம.சா.ஆ5யை குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சாட்சியம் மற்றும் சான்றாவணத்தின் படி மனுதாரர்கள் மனு இழப்பீட்டு தொகையை பெற தகுதி உடையவர்கள் என இத்தீர்ப்பாயம் முடிவு காண்கிறது. இனி பல்வேறு தலைப்புகளின் கீழ் மனுதாரர்கள் பெறத்தக்க இழப்பீடு தொகைகள் குறித்து ஆராய வேண்டியது இந்த தீர்ப்பாயம் முடிவு காண்கிறது.

(ஆ) Smt. Sarla Verma & Ors. vs. Delhi Transport Corporation & Anr. (2009) 4 MLJ (SC) 997 என்ற தீர்ப்பினில் பத்தி 9ன்படி காலமான நபரின் வயது மற்றும் வருமானத்தை நிர்ணயம் செய்ய வேண்டியது அவசியம் என இந்தத் தீர்ப்பாயம் கருதுகிறது.

SUJATHA Digitally signed by SUJATHA Date: 2025.07.07 17:34:30 +0530

(இ) **காலமான நபரின் வயது**

விபத்து சமயத்தில் காலமான நபரின் வயது குறித்து ஆராய்கையில் மனுதாரா் தரப்பில் ம.சா.ஆ.4 ஆக காலமானவரின் பிரேத பரிசோதனை அறிக்கை நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன் படி மனுதாருக்கு விபத்து சமயத்தில் 63 வயது என்று குறிப்பிப்பட்டுள்ளது. எனவே, பிரேத பரிசோதனை அறிக்கையின் படி விபத்து சமயத்தில் காலமானவரின் வயது 63 என்று எடுத்துக்கொள்ளலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

பெருக்கீடுகள்

(ஈ) **மாதவருமானம்**

மனுதாரா்கள் தரப்பில் காலமானவர் விபத்து சமயத்தில் மீன் வியாபாரம் செய்து மாதம் ரூ. 15,000/- சம்பாதித்தாக ம.சா.1 சாட்சியம் அளித்துள்ளாா். அதற்காக மனுதாரா் தரப்பில் எந்தவெரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. இருந்தபோதிலும் காலமான நபா் தான் உயிரோடு இருந்த காலத்தில் ஏதோ ஒரு வேலை பாா்த்து மாத வருமானம் ஈட்டி இருக்கக்கூடும் என்பதால் அவருடைய வயதையும் கருத்தில்கொண்டு குறைந்தபட்ச வருமானமாக ரூ.13,000/- எடுத்துக்கொள்ளலாம் என இத்தீா்ப்பாயம் தீா்மானிக்கிறது.

(உ) **எதிா்கால வரும்படி (Future Prospectus)**

காலமானவரின் வயது 63 என்றும், மாத வருமானம் ரூ.13,000/- என்றும் நிா்ணயம் செய்துள்ளதால் பிரணாய் சேத்தி முன் தீா்ப்பு படி காலமானவரின் வயதிற்கு கூடுதல் எதிா்கால வருமானம் கிடையாது என இத்தீா்ப்பாயம் தீா்மானிக்கிறது. மேற்படி தொகையினை ஒரு ஆண்டிற்கு கணக்கிட்டால் ரூ.1,56,000/- (ரூ.13,000/- X 12) வருகிறது.

SUJATHA Digitally signed by SUJATHA Date: 2025.07.07 17:34:34 +0530

(ஊ) **கழிவுகள் ((Deductions)**

மனுவின் படி காலமான Kali என்பவருக்கு உடன்பிறந்தவர்கள் என 8 வாரிசுகள் இருந்ததாக அறிய முடிகிறது எனவே ரேஷ்மா குமாரி முன்தீர்ப்பு படி காலமானவரின் ஆண்டு வருமானத்தில் 1/5 பங்கினை கழிவாக எடுத்துக்கொள்ளலாம் என இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

ஆண்டு வருமானம் ரூ.1,56,000/-

1/5 கழிவு ரூ.31,200/-

மேற்கண்ட ஆய்விலிருந்து காலமான பன்னீர்செல்வம் தனது குடும்பத்திற்கு ஆண்டிற்கு ரூ.1,24,800/-யை கொடுத்திருப்பார் என்று இத்தீர்ப்பாயம் முடிவு காண்கிறது.

(எ) **பெருக்கீடுகள்**

காலமானவரின் வயது 63 என நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதால் சரளா வர்மா முன்தீர்ப்பின் படி அவருக்கு 7 பெருக்கீட்டினை எடுத்துக்கொள்ளலாம் என இத்தீர்ப்பாயம் கருதுகிறது.

(ஏ) **சார்ந்தோர் இழப்பு (Loss of Dependency)**

ஒரு ஆண்டிற்கு குடும்பத்திற்கு கொடுக்கப்படும் தொகையை பெருக்கீட்டின்படி பெருக்கும்போது சார்ந்தோர் இழப்பு தொகை கிடைக்கும் அதன்படி காலமானவர் ஒரு வருடத்திற்கு குடும்பத்திற்கு கொடுக்கும் ரூ.1,24,800/- ஐ பெருக்கீடு 7உடன் பெருக்கினால் கீழ்க்கண்ட தொகை சார்ந்தோர் இழப்பீடாக கிடைக்கும் என இந்தத் தீர்ப்பாயம் கருதுகிறது.

வயது = 63

பெருக்கீடு = 7

SUJATHA Digitally signed by SUJATHA Date: 2025.07.07 17:34:39 +0530

ஒரு வருடத்திற்கு கொடுக்கும் தொகை ரூ.1,24,800/-

சார்ந்தோர் இழப்பு ரூ. 8,73,600/– (ரூ. 1,24,800 X 7)

(ஐ) **உறவு இழப்பு, பதவி இழப்பு, மற்றும் ஈமச்சடங்கு இழப்பு**

Loss of Consortium, Loss of Estate and Funeral Expenses

நமது மாண்புமிகு உச்சநீதிமன்றம் பிரனாய் சேத்தி முன்தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளபடி, சொத்து இழப்பிற்காக ரூ.15,000/- மும், ஈமச்சடங்கிற்காக ரூ.15,000/- மும் வழங்குவது நீதியின்பால் சரியாக இருக்கும் என்று இந்தத் தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனுதாரர்கள் கீழ்க்கண்ட தலைப்பில் கீழ்க்கண்ட தொகைகளை இழப்பீடாக பெறத் தகுதியுடையவர்கள் என இந்தத் தீர்ப்பாயம் கருதுகிறது.

சார்ந்தோர் இழப்பு	=	ரூ. 8,73,600/-
சொத்து இழப்பு	=	ரூ. 15,000/-
ஈமச்சடங்கு செலவு	=	ரூ. 15,000/-
		=========
மொத்தம்	=	ரூ. 9,03,600/-
		=========

9. முடிவில் இம்மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்களுக்கான மொத்த சரியான இழப்பீடாக ரூ.9,03,600/- வழங்க வேண்டும் என்பதாக இத்தீர்ப்பாயம் நிர்ணயித்து கீழ்க்கண்டவாறு உத்தரவிடுகிறது.

a) 1ம் எதிர்மனுதாரரும், 2ம் எதிர்மனுதாரரும் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ மனுதாரர்களுக்கு ஏற்பட்ட இழப்பிற்கு விபத்து இழப்பீட்டு தொகை கொடுக்க

SUJATHA Digitally signed by SUJATHA Date: 2025.07.07 17:34:42 +0530

கடமைப்பட்டவர்களாக உள்ள நிலையில், விபத்து ஏற்படுத்திய 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் காப்பீட்டாளர் என்ற முறையில் மேற்படி இழப்பீட்டு தொகையினை 2ம் எதிர்மனுதாரர் கொடுக்க பொறுப்பானவர் என தீர்மானித்துள்ளதால், இழப்பீடு தொகை ரூ.9,03,600/- மற்றும் அதற்கான பின் வட்டி மனு தாக்கல் செய்த நாளிலிருந்து தொகை முழுவதும் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யும் காலம் வரை 7.5சதவீத ஆண்டு வட்டியுடன் மனு தள்ளுபடி ஏதேனும் செய்யப்பட்டிருப்பின் அந்த காலத்தை கழித்து கொண்டு 2ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. மொத்த இழப்பீட்டுத் தொகையான ரூ.9,03,600/- ஐ மனுதாரர்கள் அனைவருக்கும் சரிசமமாக கிடைக்கக்கூடியது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

b) 2ம் எதிர்மனுதாரர், மேற்படி இழப்பீடுத் தொகையை வங்கி கணக்கு எண் Indian Bank, High Court Building Branch, A/c No.7103261207, IFSC Code No.IDIB000M157, MICR No.600019117ல் NEFT or RTGSன் கீழ் நேரடியாக இவ்வுத்தரவு பிறப்பித்த இரண்டு மாத காலத்திற்கு வைப்பீடு செய்யவும், மாண்புமிகு மதராஸ் உயர்நீதிமன்றம் CMA No.428/2016 dated 11.03.2016ல் பத்தி 11 (IX) ல் குறிப்பிட்டுள்ள உத்தரவின் படி அது குறித்த தகவலை இத்தீர்ப்பாயத்திற்கு உடனடியாக தெரிவிக்கவும், அவ்வாறு வைப்பீடு செய்த நடவடிக்கை குறித்த ஆவண நகலினை மனுதாரருக்கோ அல்லது அவரது வழக்கறிஞருக்கோ நேரடியாக வழங்கவும் உத்தரவிடப்படுகிறது.

c) அவ்வாறு வைப்பீடு செய்யப்பட்ட இழப்பீட்டு தொகையினை மனுதாரர்களின் வங்கிக்கணக்கு எண் கணக்கிற்கு நேரடியாக மாறுதல் செய்யவும் உத்தரவிடப்படுகிறது. மேலும் இவ்வுத்தரவு பிறப்பித்த ஒரு மாத காலத்திற்குள் மனுதாரர்களின் தனிப்பட்ட வங்கி கணக்கு

SUJATHA Digitally signed by SUJATHA Date: 2025.07.07 17:34:47 +0530

புத்தகத்தின் முதல் பக்கத்தின் **தெளிவான** நகலினை இந்நீதிமன்றத்தில் சமர்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.

d) இழப்பீட்டுத்தொகை கோரிய மனுவில் செலுத்தியுள்ள நீதிமன்றக் கட்டணம் ரூ.375/-. மனுதாராகள் செலுத்த வேண்டிய மொத்த நீதிமன்ற கட்டணம் ரூ.8,408.50/-. இழப்பீட்டுத்தொகை கோரிய மனுவில் செலுத்தியுள்ள நீதிமன்றக் கட்டணம் போக மீதமுள்ள ரூ.8,033.5/-ஐ நீதிமன்றக்கட்டணமாக செலுத்த உத்தரவிடப்படுகிறது.

e) வழக்கறிஞருக்குரிய கட்டணமாக ரூ.16,036/- நிர்ணயிக்கப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்ல சொல்ல அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SUJATHA Digitally signed by SUJATHA Date: 2025.07.07 17:34:50 +0530

மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீடு
கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
I சிறப்பு நீதிபதி, சிறு வழக்குகள் நீதிமன்றம்,
சென்னை.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:-

ம.சா.1 - திரு. திவாகர்
ம.சா.2 - திருமதி. ராணி

மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:-

ம.சா.ஆ.1	விபத்து பதிவேடு நகல்
ம.சா.ஆ.2	முதல் தகவல் அறிக்கை நகல்

ம.சா.ஆ.3	இறுதி அறிக்கை நகல்
ம.சா.ஆ.4	பிரேத பரிசோதனை அறிக்கை நகல்
ம.சா.ஆ.5	வாரிசு சான்றிதழ் நகல்
ம.சா.ஆ.6	மனுதாரர்களின் ஆதார் அட்டை நகல்
ம.சா.ஆ.7	மனுதாரர்களின் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல்
ம.சா.ஆ.8	1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநர் உரிமம் நகல்
ம.சா.ஆ.9	இறப்பு சான்றிதழ் நகல்
ம.சா.ஆ.10	ம.சா.2 வின் ஆதார் அட்டை நகல்

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்:-</u>

எ.ம.சா.1 - திரு. கார்த்திக்

<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:-</u>

எ.ம.சா.ஆ.1	அதிகார கடிதம்

<u>நீதிமன்ற தரப்பு சான்றாவணங்கள்:- இல்லை</u>

SUJATHA Digitally signed by SUJATHA Date: 2025.07.07 17:34:56 +0530

மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீடு
கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
I சிறப்பு நீதிபதி, சிறு வழக்குகள் நீதிமன்றம்,
சென்னை.

<u>மற்ற விவரங்கள்</u>

மனு தாக்கல் செய்த தேதி	19.09.2022
தீர்ப்பு நாள்	07.07.2025
மனுவில் கோரியுள்ள இழப்பீட்டு தொகை	ரூ. 20,00,000/-

தீர்ப்பாயம் வழங்கியுள்ள இழப்பீட்டு தொகை	ரூ. 9,03,600/-
மொத்த நீதிமன்ற கட்டணம்	ரூ. 8,408.50
ஏற்கனவே செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம்	ரூ. 375.00/-
மீதி செலுத்தவேண்டிய நீதிமன்ற கட்டணம்	ரூ. 8,033.50

செலவு பட்டியல்

செலவு விவரங்கள்	**தொகை**
விருது தொகைக்கான முத்திரை வரி	ரூ. 8,408.50
வக்காலத்து நாமா	ரூ. 5.00
சம்மன் பேட்டா தயாரித்தற்கான கட்டணம்	ரூ. 40.00
வழக்கறிஞர் கட்டணம்	ரூ. 16,036/-
மொத்தம்	ரூ. 24,489.50/- (துல்லியமாக ரூ. 24,490/-)

SUJATHA Digitally signed by SUJATHA Date: 2025.07.07 17:35:02 +0530

மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீடு
கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
I சிறப்பு நீதிபதி, சிறு வழக்குகள் நீதிமன்றம்,
சென்னை.

Additional court fee paid, MPSR.No..................; dated................

(SPL-I, SSJ)